1975 ஏப்ரல் 11]

(முற்பகல் 9.30)

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, வாலாஜாவில் இருக்கக் கூடிய சோடியம் டைக்ரோமைட் யூட்னி இப்போது வேலை செய்யவில்லை என்று சொன்னாலும் சிப்காட்டில் பெரிய அளவிலே இதே தொழிற்சாலை யூனிட்டை அரசு ஆரம்பிக்க இருக்கிறது. இதற்கான வேலைகளும் நடந்து கொண்டு வருகின்றன. ஆனால் இந்த யூனிட்டில் ஒரு குறிப்பிட்ட இயந்திரம் தான் வேலை செய்யவில்லையே தவிர, கட்டிடம் இருக்கிறது, கிணறுஇருக்கிறது, வாட்டர் சப்ளை நன்றாக இருக்கிறது. ஆகவே, இதே யூனிட்டில் வேறு தொழில், கெமிகல் இண்டஸ்ட்ரீஸ், திறப்பதற்கு அமைச்சரவர்கள் முயற்சி எடுத்துக் கொள்வார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, கூட்டுத் துறையில் தமிழ் நாடு க்ரோமைட்ஸ் அன்டு கெமிகல்ஸ் என்ற நிறுவனத்தின் மூலம் 3,300 டன் பேசிக் க்ரோமியம் சல்பேட் டானிங் பவுடர், 2,500 டன் சோடியம் டைக்ரோமைட், 2,400 டன் பை—ப்ராடக்ட் சல்பேட் உற்பத்தி செய்யக் கூடிய திட்டம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய யோசனையும் அரசின் கருத்தில் இருக்கிறது.

System Improvement Schemes at Hosur

*657 Q.—THIRU G. R. EDMUND : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Electricity Board has been permitted to avail the loans offered by the Rural Electricity Corporation for the System Improvement Schemes at Hosur in Dharmapuri district; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) கிராம மின்வசதிக் கழகம், தருமபுரி மாவட்டத்தில் ஒசூரில் மின் நிலைய மேம்பாட்டுத் திட்டங்களுக்காக ரூ. 8.056 லட்சம் கடன் அனுமதித்துள்ளது. இந்தத் திட்டத்திற்கு முதல் தவணைக் கடன் தொகையாகிய ரூ. 6.042 இலட்சத்தை கிராம மின் வசதிக் கழகம் கொடுத்து விட்டது.

திரு. முனு ஆதி : தலைவரவர்களே, சமயநல்லூரில் முன்பு மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. இப்போது அங்கே இயந்திரம் மட்டும் இல்லை. மற்ற எல்லா வசதிகளும் இருக்கிற போது இயந்திரத்தை வாங்கி மின்சாரம் உற்பத்தி செய்கிற உத்தேசம் அரசுக்கு உண்டாவென்று அறிய விரும்புகின்றேன்.

[1975 ஏப்ரல் 11

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, வேறு நல்ல சமயத்தில் கேள்வியைக் கேட்டதில் பதில் சொல்ல லாம்.

வருவாய் வாரியம்

*572 வினு—திரு. கா. வேழவேந்தன் திரு என். கிட்டப்பா : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) வருவாய்த் துறை வாரியத்தைக் கலைத்துவிடும் செயற் குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ)&(இ) : வருவாய், வாரியத்தை நீக்குவது பற்றிய நிர்வாக சீர்திருத்த ஆணைக்குழுவின் பரிந்துரையின் மீதான மேல்நடவடிக்கையை ஒத்திவைக்க அரசு முடிவு செய்துள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, ஏற்கெனவே வருவாய் வாரியத்தை, கால தாமதங்கள் ஏற்படுவதன் காரண மாக, செலவினங்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதன் காரணமாக, பல்வேறு காரணங்களுக்காக, கலைத்து விடலாம் என்ற கருத்து இருந்ததே, அது பற்றி அரசு தீவிர பரிசீலனை செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, அதைத்தான் சொன்னேன். நிர்வாக சீர்திருத்த ஆணைக் குழு 1972-ல் இந்த அறிக்கையைக் கொடுத்திருக்கிறது. அதைப் பரி சீலனை செய்து அதற்குப் பிறகு என்ன செய்யலாம் என்பதைப் பற்றி பிறகு முடிவு எடுக்கலாமென்று ஒத்தி வைக்கப்பட்டிருக் கிறது.

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, வருவாய்த்துறை வாரியத்தைக் கலைத்து விடுவது என்று இந்த சபையிலே அப்போது வருவாய்த்துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. மதியழகன் அவர்கள் கூறினார்கள். அதற்குப் பின்னல் அமைச்சராக இருந்த அவரும் போய்விட்டார்கள். வருவாய்வாரியத்தை கலைப்பது என்ற இந்தக் கருத்து வலுப்படுவதற்குப் பதிலாக பலஹீனப் படுத்துகிற வகையில் ஆளுங்கட்சிப் பக்கத்தில் இருந்து பதில்கள் வந்து கொண்டிருக்கின்றன. வருவாய் வாரியமானது மிக பழைய காலத்தில் இருந்து தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிற அமைப்பு.